Crl. Misc 39

DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of Criminal Procedure Code)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, COBICHETTIPALAYAM

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous | }CC No.88/2019 |
| Preliminary Register | } |
| | } Prosecution PW.4<br>} Court |
| Name | **:செல்வன்**. பாலகிருஷ்ணன் |
| Father's Name | :திரு. த/பெ. மாருச்சாமி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Caste | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day or
Date: 29.11.2022.

**முதல்விசாரணை**

நான் பாலப்பாளையத்தில் குடியிருந்து ITI படித்து முடித்துள்ளேன். எனக்கு தற்போது 18 வயதாகிறது. நான் கடந்த 2004 ஏப்ரல் மாதம் பிறந்தேன். சம்பவ சமயத்தில் நான் மல்லிபாளையம் அரசு பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்துவந்தேன். அ.சா. 1 மாரிச்சாமி எனது அப்பா, அ.சா. 2 பூங்கோதை எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 18.02.2018 அன்று காலை 9 மணியளவில் ஆஜர் எதிரிகள் அவர்களின் ஆட்டை கொண்டு வந்து எங்களின் சோளக்காட்டில் மேயவிட்டிருந்தார்கள். அதை நாங்கள் 2,3 தடவை முடுக்கிவிட்டோம். பின்னிட்டு மாலை 5.30 மணியளவில் அதே இடத்தில் எதிரிகளின் ஆடு மேய்ந்துகொண்டிருந்தது. அதை முடிக்கிவிட்டு வருவதாக கூறி எனது அப்பா சென்றார். நான் சிறிதுநேரத்தில் அவருக்கு பின்னாலேயே சென்றேன். நான் அருகில் சென்றுபார்த்தபோது ஆஜர் எதிரிகள் பொங்கியம்மாள் மற்றும் குழந்தைவேலு எனது அப்பாவிடம் நாங்கள்

அப்படித்தான் மேய்ப்போம் தாயோழி என்றும் மேலும் பல கெட்டவார்த்தைகள் பேசினார்கள். மேலும் அவர்களுடைய மகன்களான மற்ற இரண்டு ஆஜர் எதிரிகளையும் அவர்கள் அழைத்து ஆஜர் எதிரி மூர்த்தி அங்கு வந்து அப்படித்தான்டா பண்ணுவேன் தாயோழி என்று எனது அப்பாவின் வலது தொடையில் கல்லால் குத்தினார். ஆஜர் எதிரி சின்னபாப்பன் எனது அப்பாவின் இடது கை மணிக்கட்டு, இடது தோள்பட்டை, பின்முதுகு ஆகிய இடங்களில் பொலி கல்லால் குத்தினார். அந்த கற்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும் இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ. 1 வரிசை கற்கள்தான் அவைகள் ஆகும். ஆஜர் எதிரி குழந்தைவேல் எனது அப்பாவின் கழுத்தில் கையை சுற்றி எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டார். ஆஜர் எதிரி பொங்கியம்மாள் எனது அப்பாவின் கையை பின்னால் பிடித்து திருப்பினார். எனது அப்பாவின் இடுப்பின் மீது பொங்கியம்மாள் ஏறி நின்றார். ஆஜர் எதிரிகள் மூர்த்தி மற்றும் சின்னபாப்பன் ஆகியோர்கள் கற்களால் எனது அப்பாவின் வலது கால் தொடையிலும் முதுகிலும் குத்தினார்கள். எனது அப்பா அலுறும் சத்தம்கேட்டு எனது அம்மா அங்கு வந்தார். அப்போது எதிரிகள் கல்லை தூக்கிகாண்பித்துக்கொண்டு எங்களை பார்த்துக்கொண்டு கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி கற்களை அங்கேயே போட்டுவிட்டு சென்றார்கள். எனது அப்பாவை கார் மூலமாக நாங்கள் கோபி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தோம். 20.02.2018 அன்று காலை 7.45 மணியளவில் சிறுவலூர் காவல்நிலையத்தில் இருந்து போலீசார் சம்பவ இடம் வந்து விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். அங்கு கிடந்த எதிரிகள் பயன்படுத்திய கற்களையும் போலீசார் கைப்பற்றி சென்றார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எதிரிகள் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.